UK Health Security Agency

# காசநோயை (TB) பற்றி

TB என்பது ஒரு தொற்று நோயாகும், அது பொதுவாக நுரையீரல்களைப் பாதிக்கிறது. அது பேக்டீரியாவினால் ஏற்படுகிறது. அது தீவிரமாகக்கூடும், ஆனால் ஆன்டிபயாட்டிக்குகளைக் கொண்டு அது சிகிச்சை அளிக்கப்படுகிறது.

## நீங்கள் எப்படி TB நோய்த் தொற்றைப் பெறுகிறீர்கள்

TB குறிகுணங்களுடன் இருக்கும் யாராவது இருமும்போது அல்லது தும்மும்போது, பேக்டீரியாவின் சிறு திரவத்துளிகளை காற்றில் வெளியிடுகின்றனர். TB -ஐப் பெறுவது சிரமமானது ஆகும். தொற்று பெற்ற நபருடன் நீங்கள் நெருங்கிய மற்றும் வழக்கமான தொடர்பைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் தொற்று பரவிய காற்றை சுவாசிக்க வேண்டும். 2 வகைகளான TB உள்ளன, அவை செயலில் உள்ளவை மற்றும் மறைந்த நிலையில் உள்ளவை.

## செயலில் உள்ள TB (Active TB)

இதன் பொருள், பேக்டீரியா உங்கள் உடலில் செயல்பாட்டில் உள்ளது என்பதாகும். நீங்கள்:

- குறிகுணங்களைக் கொண்டிருப்பீர்கள்
- நோய்த் தொற்றைக் கடத்துவீர்கள்
- உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக உணர்வீர்கள்

## செயலில் உள்ள TB -இன் குறிகுணங்கள்

நீங்கள் இவற்றைக் கொண்டிருந்தால் ஒரு GP இடம் பேசவும்:

- சரியாகாத இருமல்
- இருமும்போது இரத்தத்துடன்கூடிய சளியை வெளியேற்றுகிறீர்கள்
- காய்ச்சல் அல்லது இரவு நேர வியர்வை

- பசியின்மை அல்லது உடல் எடை இழப்பு
- மிகுந்த சோர்வு

## மறைந்த நிலையில் உள்ள TB (Latent TB)

இதன் பொருள், பேக்டீரியா உங்கள் உடலில் செயல்பாட்டில் இல்லை என்பதாகும். நீங்கள்:

- குறிகுணங்களைக் கொண்டிருக்க மாட்டீர்கள்
- நோய்த் தொற்றைக் கடத்தமாட்டீர்கள்

## TB சிகிச்சை அளிக்கக்கூடியது

நீங்கள் TB தொற்றைப் பெற்றால், UK -இல் இலவச பரிசோதனைகள் மற்றும் சிகிச்சையைப் பெறுவீர்கள்.

## TB -க்கான பரிசோதனைகள்

நீங்கள் எந்த குறிகுணங்களையும் கொண்டிருக்கவில்லை என்றாலும் கூட, நீங்கள் பரிசோதனை செய்து கொள்ளலாம்.

உங்களுக்கு TB இருக்கிறதா என்று பரிசோதிக்க ஒரு மருத்துவர் ஒன்று அல்லது கூட்டுப் பரிசோதனைகளைப் பயன்படுத்தலாம். அவற்றில் உள்ளடங்குபவை:

- ஒரு மார்பு எக்ஸ்ரே
- ஒரு தோல் பரிசோதனை
- ஒரு இரத்தப் பரிசோதனை
- ஒரு சளி (ஃப்ளெம்) மாதிரி

## யாருக்கு TB வரலாம்

யாருக்கு வேண்டுமானாலும் TB வரலாம், ஆனால் உங்களுக்கு பின்வரும் சூழலில் TB வரக்கூடிய சாத்தியம் அதிகம்:

- செயலில் உள்ள TB உடன் இருக்கும் யாராவது ஒருவருடன் நிறைய நேரம் செலவிட்டால்
- TB அதிகமாகக் காணப்படும் ஒரு நாட்டில் வாழ்ந்திருந்தால்
- பலவீனமான நோய் எதிர்ப்பு சக்தி அமைப்பைக் கொண்டிருந்தால்
- அதிக நெரிசல் அல்லது சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்ந்தால்
- தொடர்ந்து புகைபிடித்தால், மது அருந்தினால் அல்லது போதைப் பொருட்களை எடுத்துக்கொண்டால்
- முன்பு TB இருந்து, மேலும் அது முறையாக சிகிச்சையளிக்கப்படவில்லை என்றால்

## TB -க்கான தடுப்பூசி

TB -க்கு தடுப்பூசி உள்ளது. அது BCG என்று அழைக்கப்படுகிறது. அதிக ஆபத்தில் உள்ளவர்களுக்கு மட்டுமே அது பரிந்துரைக்கப்படுவதால், NHS தடுப்பூசி அட்டவணையின் ஒரு பகுதியாக BCG வழக்கமாக வழங்கப்படுவதில்லை. தடுப்பூசி பற்றிய கூடுதல் தகவலுக்கு, NHS வலைத்தளத்தைப் பார்வையிடவும் nhs.uk/vaccinations/bcg-vaccine-for-tuberculosis-tb/.

## TB பற்றி மேலும் அறிக

மறைந்த நிலையில் உள்ள TB பற்றிய தகவல் தரும் வீடியோக்களை யூடியூப் -இல் 7 மொழிகளில் பார்க்கவும்.@TheTruthAboutTBஎன்று தேடவும்.

TB பற்றிய கூடுதல் தகவலுக்கு NHS வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் nhs.uk/conditions/tuberculosis-tb/.